முருகப்பெருமான் துணை

**மகான் சனீஸ்வர பகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.09.2022**, வெள்ளிக்கிழமை

1. வானவர்கள் போற்றும் தருமமாக
வள்ளலாக வாரி வழங்குகின்ற
ஞானதேசிகனே ஆறுமுகஅரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது வேங்கை திங்கள்
குறைவிலா முப்பானோர் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் **31** நாள், **16.09.2022** வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகன் கேட்க சனீஸ்வர பகவானும்
3. பகவானும் உலகநலமுற உரைப்பேன்
பண்புடன் மக்கள் ஞானம்பெற வேண்டி
மிகைபட வரமாக இதுநாள் அருள்வேன்
முருகப்பெருமான் அவதார சக்தியான
4. சக்தியான அரங்கமகான் தனை
சரணடைவு கண்ட மக்களுக்கு
சக்திமிகு காரி கால இடர்களும்
சாற்றிடுவேன் இலகுவாகி அகலும்
5. அகலும் ஆபத்து ஆயுத கண்டமிலா
ஆயுள்காப்பு மிகுதி ஆகும்
மகான்வழி அன்னதான சேவையில்
மனமுவந்து எவர் பொருளுதவி
6. உதவிசெய்து தருமம் காக்கின்றாரோ
உலகினில் அவர்கட்கு இனி
பதவி சுகம் புகழ்பாதுகாப்பு
பணிதிடம் தேட்டு தன வளமென
7. வளமென சகல தேற்றமும்
வகை வகையாய் கண்டுதேறுவர்
பலமான அரங்கன் உபதேசமே
பாதுகாப்புத் தரும் வேதமென
8. வேதமென எவர் எல்லாம் ஏற்று
விடாது வணங்கி பின்பற்றி
வேத ஆகமமாக கடைப்பிடித்து
விளம்பிட மற்றவரும் அறிய
9. அறியவகை செய்கின்றாரோ
அவர்கட்கெல்லாம் உலகிலினி
அறியாமை விலகி ஞானம் கூடி
ஆன்ம பலமுடன் இனிபிறவாத வண்ணம்

10. வண்ணமுடன் உயர்வு நிலை
வள்ளல் அரங்கனால் கிட்டும்
எண்ணம் தூய்மை ஆகி
எக்காலமும் குருவருள் துணைபட

11. துணைபட காலம் கடத்தி
தூயஞான சேவை ஆற்றி
இணையிலா ஞானியே ஆகுவர்
இயம்பிய அருளாசி முற்றே

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி

நவகிரக நாயகர்களின் நூல் வரிசையில் மகான் சனீஸ்வர பகவான் அருளியுள்ள அருளாசி நூலின் சாரம் :–

துறையூர் அகத்தியர் சன்மார்க்க சங்கம் ஓங்காரக்குடிலில் மகான் முருக பெருமானின் மறுதோன்றலாக அவதரித்துள்ள ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் உபதேசித்து வரும் உண்மை நெறியான சன்மார்க்க கொள்கைகளான உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு மகான் முருகப்பெருமான் திருவடிகளை ‘‘ஓம் சரவணஜோதியே நமோ நம’’ என்றும் ‘‘ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி’’ என்றும் வணங்கி வரும் மக்களுக்கு,

- ஏழரை சனியினாலும், அட்டம சனியினாலும் எவ்வித இடர்களோ துன்பங்களோ வராது என்றும்,
- எல்லாவித கண்டங்களும் அகன்று நீடிய ஆயுள் உண்டாகும் என்றும்,

மகான் சனிபகவான் அருளியுள்ளார்கள். மேலும், ஓங்காரக்குடிலாசானின் அன்னதான சேவையில் பொருளுதவி செய்து பங்குபெறும் மக்கள் பெரும் பதவி பெற்று, பொருள் வளம் கூடி மகிழ்வான வாழ்க்கை வாழ்வார்கள் என்றும் அருளியுள்ளார்கள். ஓங்காரக்குடிலாசான் உபதேசங்களை வேதவாக்காக ஏற்று செயல்பட்டு, அந்த உபதேசங்களை மற்றவர்களுக்கும் அறிவித்து வரும் மக்களுக்கு அறியாமை என்ற இருள் விலகி, எண்ணங்கள் தெளிவடைந்து தூய்மையாகி, ஆன்ம ஞானம் பெற்று மரணமில்லா பெருவாழ்வு வாய்ப்பு கிடைக்கப் பெறுவார்கள் என்று மகான் சனிபகவான் அருளாசி நூலின் மூலம் அருளியுள்ளார்கள்.

பற்றற்ற வேலவன் பதமலர் பற்றிட
நற்றவம் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்.

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

.......